| | |
|---|---|
| MINISTÈRE DE LA JUSTICE<br>Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE | 10<br># உரிமைகள் பிரகடனம்<br>## நீதிமன்றத்தில் உடனடி தோற்றம் நடைமுறையில் தற்காலிக காவலில் இருபவருக்கு கொடுக்க<br>### அல்லது உங்களை நிகழ்ச்சிக் குறிப்புகள் அவணதாள் உங்களை நீதிமன்றத்திற்கு கூப்பிட்டு, உங்கள் நீதித்துறை கட்டுபாட்டை நிராகரித்த பிறகு இருந்தால் |

குற்றவியல் நீதிமன்றம் உங்கள் மீது இருக்கின்ற குற்றசாட்டிற்கு தீர்ப்பளிக்கபோகிறது நீங்கள் அந்த நீதிமன்றத்திற்கு போகும் திகதிக்கு முன் தற்காலிக காவலில் வைக்கபட்டிருகிறீர்கள். இந்த ஆவணம் உங்களுக்கு இருக்கின்ற முக்கியமான மூன்று உரிமைகளை நினைவுபடுத்துகிறது.

***நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்***

**குற்றத்தை பற்றி அறிவது**

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் நடைபெற்ற இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. அத்துடன் தற்காலிக காவலில் வைக்க படுவதற்கு உள்ள காரணங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

**ஒரு வழக்கறிஞரால் உதவி**

இந்த வழக்கு நடைபெறும் வரை, நீங்கள் தேர்ந்தெடுத்த அல்லது அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடலாம்.
நீங்கள் சுதந்திரமாக வக்கீலுடன் உரையாடலாம் அல்லது கடிதம் அனுப்பலாம், மற்றும் அவர் உங்கள் நீதிமன்ற விசாரணைகளுக்கும் வருவார், விசாரணை நேரத்தை அவருக்கு தெரிவிக்க வேண்டும்.

**மௌனத்தை கடைபிடிக்கும் உரிமை**

நீதிமன்றத்தில், அறிக்கை அளிப்பதா, உங்களை கேட்கபோகிற கேள்விகளுக்கு பதிலளிப்பதா அல்லது மௌனமாக இருப்பதா என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

## ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

## உங்களை விடுவிக்க கேட்கும் உரிமை

எந்நேரமும் உங்களை விடுவிக்க நீங்கள் நீதிமன்றத்திடம் கோரிக்கை வைக்கலாம்.

## சுதந்திரத்தை இழப்பு கால அளவு

உங்கள் தற்காலிக காவல் அடுத்த அல்லது புதிய குற்றவியல் நீதிமன்றத்தில் நீங்கள் வரவேண்டிய, குறித்த திகதி வரை தொடரும்.

நீங்கள் சுதந்திர மற்றும் காவல் நீதிபதியால், உடனடியாக நீதிமன்றத்திற்கு போகவேண்டும் என்றால், தற்காலிக காவலில் வைக்கபட்டிருந்தால், அந்த தற்காலிக காவல் மூன்று நாளைக்கு மேல் நடைபெறாது.

நீங்கள் சுதந்திர மற்றும் காவல் நீதிபதியால், உங்கள் நீதித்துறை கட்டுப்பாட்டை மதிக்காததால், தற்காலிக காவலில் வைக்கபட்டிருந்து, உங்களை உடனடியாக குற்றவியல் நீதிமன்றதிற்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலையில் இருந்தால், உங்கள் தற்காலிக காவல் இரண்டு மாதத்திற்க்கு மேல் நடைபெறலாம்.

நீங்கள் குற்றவியல் நீதிமன்றதால், தற்காலிக காவலில் வைக்கபட்டிருந்து, அவர்கள் உங்கள் கோப்பை வேறொரு நாளைக்கு தள்ளி வைத்திருந்தால், உங்கள் காவல் நேரம் ஆறு கிழமைகளை தாண்டாது, அல்லது உங்களுக்கு எதிரான குற்றசாட்டிற்கு ஏழு வருட சிறை தண்டனை கூறியதாக இருந்தால் நான்கு மாதங்களாக இருக்கும்.

## சில நபருக்கு தெரிவித்தல்

உங்களுக்கு விருப்பப்பட்ட நபருக்கு குறிப்பாக உங்கள் குடும்பத்தை சேர்ந்தவருக்கு நீங்கள் தற்காலிக காவலில் இருப்பதை தெரிவிக்கலாம்.

நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## மருத்துவ பரிசோதனை

நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம்.

## உங்கள் கோப்பை பார்க்க

உங்கள் வழக்கறிஞர் உங்கள் கோப்பை பார்க்கலாம் மற்றும் அதன் நகலையும் கேட்டு வாங்கலாம். நீங்களும் அதன் நகலை கேட்கலாம்.